©
GOVERNMENT OF TAMIL NADU
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 386] CHENNAI, WEDNESDAY, DECEMBER 22, 2010
Margazhi 7, Thiruvalluvar Aandu–2041

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், திருவள்ளூர்.**

**திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அலமாதி ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் குறித்த அறிவிப்பு**

[*ந.க.எண் 2004/09/அ3/உ.இ.(ஊ).*]

**No. VI(2)/577(b)/2010.**

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், சோழவரம் ஊராட்சி ஒன்றியம், அலமாதி ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி T. தவமணி என்பவர் தனது மகன் உதவியில்லாமல் தன்னிச்சையாக ஊராட்சி நிர்வாகத்தை செயல்படுத்த இயலாது என தெரிவித்துள்ளதுடன், ஊராட்சியின் வரியினங்களை தனது மகன் மூலம் வசூல் செய்தும், ஊராட்சியின் ஆவணங்களில் தனது மகனை கையொப்பமிட அனுமதித்ததன்மூலம் தனது அதிகாரத்தினை துஷ்பிரயோகம் செய்து தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994–ஐ மீறியுள்ளார். மேலும், ஊராட்சி நிதியில் விதிமுறைகளை கடைபிடிக்காமல் செலவினங்கள் மேற்கொண்டு ஊராட்சி நிதிக்கு ரூ. 29,46,926 இழப்பு ஏற்படுத்தியுள்ளார். மேற்காணும் காரணங்களுக்காக இவர் தொடர்ந்து ஊராட்சி மன்றத் தலைவராக செயல்பட்டால் ஊராட்சி நிதிக்கு பெருமளவு நிதியிழப்பு ஏற்படுத்துவார் என்பதை கருத்தில் கொண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 உட்பிரிவு (11)ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினை பயன்படுத்தி அலமாதி ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி T. தவமணி என்பவரை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன்மூலம் அறிவிப்பு செய்யப்படுகிறது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262 (1)ன்கீழ் இந்த பதவி நீக்கம் குறித்த அறிவிப்பு ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்.

திருவள்ளூர்,
2010, டிசம்பர் 22.

**T.P. ராஜேஷ்,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித்தலைவர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

DTP—VI-2 Ex. (386)